# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் – 03.07.2025**

**முன்னிலை**

## திரு முகம்மது ஷகீல் அ்ஃதர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

## வழக்கு எண். CP 3298/SCIC/2023

திருS.செல்லமுத்து த/பெ.சுப்பன் — மனுதாரர்
எண்.21/2, 2வது மாடி
வேலவன் நகர் 1வது தெரு
ஸ்டேட் பாங்க் ஆப் இண்டியா அருகில்
கொளத்தூர், சென்னை - 600 099.

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
1 எண். இணை சார்பதிவாளர்
1 எண். இணை சார்பதிவாளர் அலுவலகம் ... பொது அதிகார அமைப்பு
செங்கல்பட்டு

**ஆணை**

1.இவ்வழக்கு ஏற்கெனவே 06/05/2025 அன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு கீழ்க் கண்ட உத்தரவினைப் பிறப்பித்திருந்தது.

> **“ 4. மனுதாரரின் சட்டப்பிரிவு 6(1)-ன் கீழான 04/08/2023 தேதியிட்ட மனுவிற்கு பொதுத் தகவல் அலுவலரால் எந்தவித தகவல்களும் வழங்கப்படவில்லை. எனவே, அப்போது பணியிலிருந்த பொதுத் தகவல் அலுவலர் திரு அன்பழகன் என்பவர் மனுதாரரின் மனுவிற்கு எந்தவித தகவல்களும் வழங்காத காரணத்திற்காக சட்டப் பிரிவுகள் 20(1) மற்றும் 20(2)-ன் கீழ் அவர் மீது ஏன் நடவடிக்கை மேற்கொள்ளக் கூடாது என்பதற்கான அவரது விளக்கத்தினை 15 தினங்களுக்குள் மேற்படி அலுவலரிடமிருந்து பெற்று தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் ஆணையத்தில் சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்படுகிறது.**

2. மேற்குறிப்பிட்டவாறு, திரு.அன்பழகன், முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்/ 1 எண். இணை சார்பதிவாளர். செங்கல்பட்டு அவர்களிடமிருந்து 05/06/2025 தேதியிட்ட காரணம் கேட்கும் குறிப்பாணைக்குரிய விளக்கம் ஆணையத்தால் பெறப்பட்டது. அவ்விளக்கத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"பார்வை 1-ல் கண்ட மனுதாரரின் விண்ணப்பத்தில் தனக்கு சொந்தமான மனையிடம் போலியாக மோசடி பத்திரப் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் போலி பத்திரப் பதிவு செய்த நபர்கள் மீது காவல் துறையில் புகாரளிக்கப்பட்டுள்ளதா எனவும் மேற்படி ஆவணப் பதிவுகளை ரத்து செய்ய நடவடிக்கை எடுத்த விவரம் தெரிவிக்கக் கோரி விண்ணப்பம் அளித்திருந்தார்.

மனுதாரர் கோரி தகவல்கள் பார்வை-2-ல் கண்ட கடிதம் மூலமாக வழங்கப்பட்டது. தற்போது பதிவுத்துறைத் தலைவர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை எண்.03/2023 கடித எண்.36330/U1/2023, நாள் 29/09/2023-ன்படியும், மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் நீதிப்பேராணை W.P.No.18814/2023 நாள் 27/06/2023-ன்படியும் பதிவுச் சட்டப்பிரிவு 77(A)-ன் கீழ் விசாரணை அலுவலர்களாக உள்ள மாவட்டப் பதிவாளர் (நிருவாகம்) மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற Larger Bench-ன் முடிவு வரும் வரை எவ்வித விசாரணையும் மேற்கொள்ளக் கூடாது என அறிவுறுத்தப்பட்டிருந்த நிலையில் தற்போது மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் நீதிப்பேராணை W.P.No.18814/2023-ன் Larger Bench-ன் 02/08/2024 நாளிட்ட தீர்ப்பின்படி மாவட்டப் பதிவாளர்களுக்கான போலி ஆவண ரத்து செய்வது தொடர்பான பதிவுச் சட்டப் பிரிவு 77(A) நீக்கம் செய்யப்பட்டது. எனவே, மனுதாரர் போலி ஆவண ரத்து தொடர்பாக உரிய உரிமையியல் நீதிமன்றத்தின் மூலம் பரிகாரம் தேடிக் கொள்ளுமாறு தகவல் தெரிவிக்கப்பட்டது.

எனினும் விண்ணப்பதாரர் மேற்படி கோரிக்கையை நிறைவேற்றக் கோரி மேல்முறையீட்டு மனுவினை மாநில தகவல் ஆணையத்திற்கு அளித்துள்ளார்.

பார்வை-5-ல் கண்ட கடிதப்படி பொதுத் தகவல் அலுவலர் மற்றும் 1 எண்.இணை சார்பதிவாளர், செங்கல்பட்டு அவர்களால் மாநில தகவல் ஆணையத்திற்கு விளக்கம் பணிந்து சமர்ப்பிக்கப்பட்டது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்."

**3. திரு.அன்பழகன், முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்/ 1 எண். இணை சார்பதிவாளர். செங்கல்பட்டு (தற்போது) சார்பதிவாளர், துவரங்குறிச்சி சார்பதிவகம் அவர்களின் காரணம் கேட்கும் குறிப்பாணைக்குரிய விளக்கத்தினை ஆணையம் பரிசீலனை செய்கையில், அவை ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இல்லை. பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு, சட்டப் பிரிவு 6(1)-ன் கீழான மனுவிற்கு விண்ணப்பித்த 30 நாட்களுக்குள் தகவல்களை வழங்க வேண்டியது, அவரது முதன்மையான கடமையாகும். ஆனால், மனுதாரருக்கு ஒரு வருடத்திற்கும் மேல் ஆன பின்னரே, தகவல் வழங்கப்பட்டுள்ளது. தற்போது, இப்பொதுத் தகவல் அலுவலர், துவரங்குறிச்சி சார்பதிவகத்தில், சார்பதிவாளராக பணியாற்றி வருகிறார். எனவே, துணைப் பதிவுத்துறைத் தலைவர், திருச்சி மண்டலம் அவர்கள் இவ்வாணை கிடைக்கப் பெற்ற இரண்டு மாத காலத்திற்குள் மேற்சொன்ன திரு.அன்பழகன், சார்பதிவாளர், துவரங்குறிச்சி சார்பதிவகம் அவர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுத்து, அன்னார் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கையினை ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது. எனவே, இப்புகார் மனு மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(முகம்மது ஷகீல் அ்ஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

## **வழக்கு எண். CP 3298/SCIC/2023**

**பெறுநர்**
**பொது அதிகார அமைப்பு**
துணைப் பதிவுத்துறைத் தலைவர்
துணைப் பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம்
திருச்சி மண்டலம்

2.பொதுத் தகவல் அலுவலர்/
1 எண். இணை சார்பதிவாளர்
1 எண். இணை சார்பதிவாளர் அலுவலகம்
செங்கல்பட்டு

3.திரு.அன்பழகன்,
முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்
சார்பதிவாளர்,
துவரங்குறிச்சி சார்பதிவகம்

**புகார்தாரர்**
திருS.செல்லமுத்து த/பெ.சுப்பன்
எண்.21/2, 2வது மாடி
வேலவன் நகர் 1வது தெரு
ஸ்டேட் பாங்க் ஆப் இண்டியா அருகில்
கொளத்தூர், சென்னை - 600 099.

நகல்
பதிவாளர்
தமிழ்நாடு தகவல் ஆணையம்
சென்னை-600 035 (for follow up)

RG/PC